20.09.2017

அனுப்புநர்: கோயில்ராஜ் (வயது 44/17)
த/பெ ஜெயராஜ்,
நல்லூர், கோழிப்பாறை போஸ்ட்
பாலக்காடு மாவட்டம், கேரளா

பெறுநர்:
1. உயர்திரு இயக்குநர் அவர்கள்
மெட்ரிக் பள்ளிகள்
DPI வளாகம், சென்னை – 600 006

2. உயர்திரு ஆய்வாளர் அவர்கள்
மெட்ரிக் பள்ளிகள்
விருதுநகர் – 626 001

3. உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்
தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி

அய்யா,

**பொருள்:** மேரி இம்மாகுலேட் மெட்ரிகுலேசன் பள்ளி, சாத்தான்குளம் – மோசடியான நில ஆவணங்களின் பேரில் அனுமதியும் அங்கீகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது – உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டுதல் சார்பாக

மேற்படி பள்ளி சாத்தான்குளம் இட்டமொழி ரோட்டில் புதுக்குளம் கிராமத்தில் அமைந்துள்ளது. கட்டிடம் அமைந்துள்ள நிலம் 519/1996 என்ற ஆவணமாக சாத்தான்குளம் பதிவு அலுவலகத்தில் 05.03.1996ல் தூத்துக்குடி க்ரேட் காட்டன் ரோட்டில் செயல்படும் தூத்துக்குடி

Scanned by CamScanner

டயோசிசன் அசோசியேஷன் (பதிவெண் எஸ்.1/1937-38 நாள் 14.04.1937) என்ற பதிவு பெற்ற சங்கத்தின் பெயரில் பதிவாகியுள்ளது. கிரைய ஆவணப் பதிவின் போது சர்வே எண் 3/1A மற்றும் 3/1A5 ஆகியவற்றில் உள்ள எனது நிலத்தையும் சேர்த்து மேற்படி சங்கம் பதிவு செய்துள்ளது. எனவே மேற்படி நிலப்பதிவில் மோசடி நடந்துள்ளது. அக்கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல.

மொசடி செய்து கிரயம் செய்துள்ள இந்த நிலத்திற்கு சிறிதும் தொடர்பில்லாத நபரான திரு. பர்ணபாஸ் என்பார் அதை ஆர்.சி.சர்ச், சாத்தான்குளம் என்ற பெயரில் தனிப்பட்டாவாக்க வேண்டும் என்று 26.04.2017ல் விண்ணப்பித்துள்ளார். மேலும் அன்னார் 13.06.2007ல் அந்த நிலம் ஆர்.சி.மிஷனுக்கு சொந்தமானது என்ற புதிய விவரத்தினைக் கூறி மோசடியாக பட்டாவுக்கு விண்ணப்பித்துள்ளார். நிலத்துக்கு சற்றும் தொடர்பில்லாத திரு. பர்ணபாஸ் என்பாரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தாசில்தார் 08.08.2007ல் உட்பிரிவுகள் செய்து பட்டா மாற்றி கொடுத்துள்ளார். அதன்படி புதுக்குளம் கிராமம் பட்டா எண் 2775 என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் உரிமையாளர் பெயர் ஆர்.சி.சர்ச் சாத்தான்குளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆர்.சி.சர்ச் சாத்தான்குளம் என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்ல. எனது நிலத்தையும் சேர்த்து பட்டா செய்திருப்பது அடுத்த மோசடி ஆகும்.

அடுத்த மோசடி என்னவென்றால் இந்த நிலம் அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க எனது நிலத்தையும் உள்ளடக்கி சாத்தான்குளம் தூய இருதய மேல்நிலைப்பள்ளிக்கும் சாத்தான்குளம் புனித ஜோசப் பெண்கள் மேல் நிலைப் பள்ளிக்கும் விளையாட்டிடமாக பயன்பட்டு வருகிறது என்ற சான்றினை தூத்துக்குடி டயோசிசன் அசோசியேஷன் என்ற சங்கத்தின் செயலர் திரு தியோபிலஸ் என்பாரிடம் 03.10.2005 அன்று வாங்கிய ஐந்து ரூபாய் மதிப்புள்ள முத்திரைத்தாளில் தேதி ஏதும் இடாமல் இரு

Scanned by CamScanner

ஆவணங்கள் தயாரித்து அதை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பியுள்ளனர். அதனடிப்படையில் அங்கீகாரம் அனுபவித்து வருகின்றனர். அடுத்த மோசடி என்னவென்றால் இவ்விளையாட்டு மைதானத்தை இரு பள்ளிகளும் பயன்படுத்த இயலாது. அது பள்ளியில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இருப்பினும் புதுக்குளம் கிராம நிர்வாக அலுவலரிடம் விளையாட்டு மைதானம் பள்ளியில் இருந்து 1 கி.மீட்டர் தூரத்தில்தான் உள்ளது என சான்று வாங்கி சம்மந்தப்பட்ட பள்ளித்தாளாளர்கள் அனுப்பியுள்ளனர். அடுத்த பொய் என்னவென்றால் இந்த விளையாட்டு மைதானத்திற்கு மாணவ மாணவிகள் உடற்பயிற்சி பாடவேளைகளில் இருசக்கர மிதிவண்டிகளிலும் வாகனங்களிலும் சென்று வருகின்றனர் என்று தாளாளர் சான்றளித்துள்ளார்.

எனது நிலத்தையும் சேர்த்து கிரையம் செய்து ஆர்.சி.சர்ச் சாத்தான்குளம் என்ற பெயருக்கு மோசடியாக பட்டா மாற்றம் செய்து புதுக்குளம் கிராமத்தில் உள்ள இந்த நிலத்தை சாத்தான்குளத்தில் உள்ள பள்ளிகளின் விளையாட்டிடமாக காட்டி அரசை ஏமாற்றி அங்கீகாரமும் நிதி உதவியும் பெறுவதோடு நில்லாமல் அதே நிலத்தில் மேரி இம்மாகுலேட் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கான கட்டிடம் கட்டப்பட்டுள்ளது பெருங்குற்றமாகும். இதை அறிந்த நான் எனது நிலத்தையும் சேர்த்து மோசடியாக கிரையம் செய்துள்ளதையும் பட்டா பெற்றுள்ளதையும் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மறைதிரு ரெமிஜியஸ் ஆகியோருக்கு தெரிவித்து தக்க நடவட்டிக்கை எடுக்குமாறு வேண்டினேன். இந்த நில அபகரிப்பில் முழுமூச்சுடன் செயல்பட்ட பிஷப் இவான் அம்புரோஸ் மற்றும் பாதிரியார் எட்வர்ட் ஆகியோரும் இந்த எனது சட்டப்பூர்வமான கோரிக்கையினை உதாசீனம் செய்து எந்த நடவடிக்கையும் எடுக்காதுள்ளனர்.

Scanned by CamScanner

மேற்படி கிரய பத்திரம், பட்டா, விளையாட்டிடமாக பயன்படுத்தும் செயல் அனைத்தும் மோசடியாக இருக்கும் போது மேரி இம்மாகுலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி கட்டுவதற்கு திரு ரூபர்ட் என்பார் அடுத்த மோசடி திட்டம் தீட்டியுள்ளார். அவர் பிஷப் இவான் அம்புரோஸ் என்பாருடன் சேர்ந்துகொண்டு மேரி இம்மாகுலேட் மெட்ரிக் பள்ளிக்கு நிலமே இல்லாத போது திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடமிருந்து 03.02.2016 அன்று கட்டிட அனுமதி பெற்றுள்ளார். பள்ளியின் பெயருக்கு நிலம் இல்லாமலே கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது அடுத்த மோசடி ஆகும்.

இதற்கிடையில் ஆர்.சி.சர்ச் சாத்தான்குளம் என்ற பட்டாவினை பயன்படுத்தி திரு சகாய ஜொசப் என்பார் 10.06.2016ல் மூன்று குத்தகை ஆவணங்களை பதிவு செய்துள்ளார். அதில் ஒன்று இப்பள்ளிக்கானதாகும். புதுக்குளம் கிராமம் பட்டா எண் 2775 என்பது ஏற்கனவே திரு பர்ணபாஸ் என்பார் மோசடி செய்து பெற்ற பட்டாவாகும். அது தெளிவில்லாத பதிவு செய்யப்படாத ஆர்.சி.சர்ச் சாத்தான்குளம் என்ற பெயரில் உள்ளது. இந்த பட்டாவை காட்டி திரு சகாய ஜோசப் என்பார் இப்பள்ளியின் பெயரில் குத்தகை ஆவணம் தயாரித்துள்ளது மற்றுமொரு மோசடியாகும். குத்தகை பத்திரம் 758/2016 என பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பட்டாவினை அடிப்படையாக வைத்து குத்தகை பத்திரத்தினை மேரி இம்மாகுலேட் மெட்ரிக் பள்ளியின் பெயரில் சாத்தான்குளம் பதிவாளர் பதிவு செய்துள்ளது சட்டப்படி குற்றமாகும்.

இதற்கிடையில் எனது மனுக்களின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ந.க.அ1/4635/2016 நாள் 19.08.2016 என்ற கடிதம் மூலம் விசாரணை அறிவிப்பு கொடுத்தார். மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ந.க.டி2/15547/2016-51 நாள் 23.08.2016 கடிதத்தில் திருச்செந்தூர் கோட்டாட்சியர் அவர்களிடம் பட்டாமாற்றம் செய்ய நான்

Scanned by CamScanner

அனுப்பிய மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அனுப்பும்படி வேண்டினார்.

இந்நிலையில் திருச்செந்தூர் கோட்டாட்சித்தலைவர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கு கிரய ஆவணங்களில் உண்மைத்தன்மை தொடர்புள்ளதாக இருப்பதால் மனுதாரர் உரிமையியல் நீதிமன்றம் மூலம் தீர்வு காணவேண்டும் என்றும் இதற்கிடையில் வட்ட மற்றும் கிராமக் கணக்குகளில் எவ்வித திருத்தங்களும் செய்யக் கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளார். சுருக்கமாக சொன்னால்

1. எனது நிலத்தையும் சேர்த்து கிரயப்பத்திரம் செய்துள்ளதால் 05.03.1996ல் சாத்தான்குளத்தில் பதியப்பட்ட 519/1996 என்ற கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல. இது ஒரு நில அபகரிப்பு மோசடி ஆகும்.

2. மேற்படி 519/1996 என்ற கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்கிறபோது கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் சம்மந்தமில்லாத திரு பர்ணபாஸ் என்பார் பட்டாவுக்கு விண்ணப்பித்ததும் அதை பரிசீலனை செய்து தனிப்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்ததும் அடுத்த மோசடி ஆகும்.

3. மேற்படி பட்டாவை சம்மந்தமில்லாத, பதிவு செய்யப்படாத ஆர்.சி.சர்ச், சாத்தான்குளம் என்ற பெயருக்கு மாற்றிக் கொடுத்துள்ளது அடுத்த நில மோசடி ஆகும்.

4. எனது நிலத்தையும் சேர்த்து இரு பள்ளிகளுக்கு விளையாட்டிடம் என்று எழுதிக்கொடுத்து சாத்தான்குளம் தூய இருதய மேல் நிலைப்பள்ளியும்

Scanned by CamScanner

புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியும் அங்கீகாரமும் நிதி உதவியும் பெற்றுவருவது அடுத்த மோசடி ஆகும்.

5. மேரி இம்மாகுலேட் பள்ளியின் பெயருக்கு நிலமே இல்லாதபோது அப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் 03.02.2016 அன்று கட்டிட அனுமதி கொடுத்துள்ளது சட்டவிரோதமாகும்.

5. புதுக்குளம் கிராமம் பட்டா எண் 2775 என்பதற்கு உரிமையாளர் ஆர்.சி.சர்ச், சாத்தான்குளம் என்று குறிப்பிட்டு பட்டா வழங்கியிருப்பது அடிப்படையிலேயே குற்றமாகும். அந்த பட்டாவில் எனது நிலத்தையும் சேர்த்துள்ளது நில மோசடியாகும்.

6. மேற்படி பட்டாவை பயன்படுத்தி திரு சகாய ஜோசப் என்பார் 10.06.2016ல் மேரி இம்மாகுலேட் பள்ளிக்கு 758/2016 என்ற குத்தகை பத்திரம் பதிவு செய்திருப்பது அடுத்த மோசடி ஆகும்.

இவ்வளவு பிரச்னைகள் இருந்தும் எதையும் பொருட்படுத்தாமல் மேரி இம்மாகுலேட் மெட்ரிக் பள்ளிக்கு அனுமதியும் அங்கீகாரமும் கொடுத்துள்ளது சட்டவிரோதமாகும். எனவே மோசடி செய்து பதிந்த கிரய ஆவணம் மற்றும் பட்டாவின் அடிப்படையில் இப்பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தினை இரத்து செய்து ஆணையிடுமாறு தங்களை பணிந்து வேண்டுகிறேன்.

இப்பள்ளி நிர்வாகம் பழைய ட்ரெக்கர் வைத்து மாணவர்களை பள்ளிக்கு எடுத்து வருகிறது. கடந்த 22.08.2017ல் குழந்தைகளை ஏற்றிவந்த ட்ரெக்கர் தலைகீழாக கவிழ்ந்து மாணவர்கள் காயமுற்றனர். இந்த வழக்கு சாத்தான்குளம் காவல் நிலையத்தில் FIR 286/22.08.2017 என்று பதிவு

Scanned by CamScanner

செய்யப்பட்டு நீதிமன்றத்தில் 23.08.2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வழக்கில் பள்ளி நிர்வாகத்திற்கும் இந்த ட்ரெக்கருக்கும் சம்மந்தமில்லாததுபோல காட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உடனடி நடவடிக்கை அவசியம் என்பதை வலியுறுத்துகின்றேன்.

நன்றி.

உண்மையுள்ள,

நாள்: 20.09.2017

J. Koilraj

Scanned by CamScanner